IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

OS NO.147/2010

**DW1 :** Krishnappa S/o. Dhanada Muniyappa, (Age – 60)

**Date :** 23.01.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : –**

பி.வா.சா.ஆ. 1 பாகப்பிரிவினைப்பத்திரத்தில் ஆவலமுனியப்பா மற்றும் அவருடைய சகோதரர்களுக்கும் சர்வே எண் 50ல் பாகம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண் 50ன் மொத்த விஸ்தீரணம் 6.09 ஏக்கர். சர்வே எண் 50யை UDR காலத்திலேயே 50/1A, 50/1B, 50/1C மற்றும் 50/2 என நான்கு உட்பிரிவுகள் செய்யப்பட்டது என்றால் சரிதான். அது தவறாக செய்யப்பட்டது. சர்வே எண் 50/1A வில் 0.11.0 ஹெர்ஸ் என்றால் சரிதான். 50/1B ல் 0.62.5 ஏக்டர்ஸ் முனியப்பா பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் அது தவறாக வழங்கப்பட்டது. 50/1C 0.02.0 ஹெர்ஸ் முனியப்பா மற்றும் திம்மராயப்பா பெயரில் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாக வழங்கப்பட்டது. சர்வே எண் 50/2ல் 1.71.0 ஏக்டர்ஸ் திம்மராயப்பா பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

சர்வே எண் 50/1Bல் 0.62.5 ஹெர்ஸ்க்கு முனியப்பா பெயரில் தவறாக பட்டா வழங்கப்பட்டுள்ளதாக நான் வழக்காடுகிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் பாகம் கொடுக்கப்பட்ட மற்ற சொத்துகளுக்கு அவரவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். UDRல் தவறு ஏற்பட்டால் அதனை திருத்தம் செய்ய மாவட்ட வருவாய் அதிகாரிக்கு தான் அதிகாரம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். நான் சொல்வதை போல் UDR ல் பட்டா தவறாக வழங்கப்பட்டுள்ளது என நான் மாவட்ட வருவாய் அதிகாரியிடம் மனுக்கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் கொடுத்த மனுவில்

மாவட்ட வருவாய் அதிகாரி என்னையும் வாதியையும் அழைத்து விசாரணை செய்து உத்தரவு பிறப்பித்தாரா என்றால் உத்தரவு பிறப்பித்தார். மாவட்ட வருவாய் அதிகாரி பிறப்பித்த உத்தரவு எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியாது. வட்டாட்சியர் சர்வே எண் 50/1B உட்பிரிவுசெய்து 50/1B1 க்கு 10 ஏர்ஸ்க்கு என் பெயரிலும் 50/1B2 க்கு 52.5 ஏர்ஸ்க்கு வாதி பெயரிலும் பட்டா மாறுதல் செய்து உத்தரவு பிறப்பித்தாக பி.வா.சா.ஆ.4 உத்தரவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.4 உத்தரவு எந்த ஆவணத்தின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டது என்பதற்கும், வாதியை அழைத்து விசாரணை செய்ததற்கும் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. UDRல் வழங்கப்பட்ட பட்டாவை மாற்றம் செய்ய மாவட்ட வருவாய் அதிகாரி எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றாலும் ஆனால் வட்டாட்சியர் தன்னிச்சையாக பி.வா.சா.ஆ.4 உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 பட்டா மாறுதல் உத்தரவு தவறானது என வாதி வட்டாட்சியரிடம் மனுத்தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வாதி அளித்த மனுவில் வட்டாட்சியர் விசாரணை செய்து கடந்த 30.11.2005 தேதியில் பி.வா.சா.ஆ.7 உத்தரவில் எங்களை நீதிமன்றம் மூலம் அதிகாரம் கோரிக்கொள்ளும் படி கோரியுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 உத்தரவிற்கு பிறகு நான் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை எனறால் சரிதான். வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அதற்கு நான் பதில் அளித்துள்ளேன். மோரனப்பள்ளி கிராம சர்வே எண் 46,47,48,50,53,54,56,57 மற்றும 423ல் பாதை இருப்பதாக

நான் வட்டாட்சியரிடம் மனுக்கொடுத்தேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 குறிப்பாணையில் வட்ட சார் ஆய்வாளர் அளவை செய்து பார்வை 2ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் ஆனால் அந்த அறிக்கை எதுவும் தாக்கல் செய்யபடவில்லை என்றாலும் சரியல்ல.

நாங்கள் பஞ்சாயத்திற்கு எழுதிக்கொடுத்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண் 50/1B1 எங்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது என குறிப்பிடப்படவில்லை என்றால் எங்களுடைய பூர்விக சொத்து என குறிப்பிட்டுள்ளோம். பி.வா.சா.ஆ.2 தான செட்டில் மெண்ட் பத்திரத்தை எழுதிய தேதியில் சர்வே எண் 50/1B க்கு எங்கள் பெயரிலிலோ என் தந்தை பெயரிலோ எந்த ஆவணம் இல்லை என்றால் பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் தான் எங்களுக்கு மூலப்பத்திரம். வாதிக்கும் அந்த பத்திரம் தான் மூலப்பத்திரம். பி.வா.சா.ஆ.1 பத்திரத்திற்கு பிறகு சர்வே எண் 50ல் ஆவலமுனியப்பாவிற்கு 25 செண்ட் பாகம் கிடைத்தது என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. 2004ம் ஆண்டு ஒசூர் வட்டாட்சியர் பிறப்பித்த பி.வா.சா.ஆ.4 உத்தரவின் அடிப்படையில் தான் வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியம் என வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 உத்தரவை பிறப்பிக்க ஒசூர் வட்டாட்சியருக்கு அதிகாரம் இல்லை என்றாலும் அந்த உத்தரவு செல்லாது என்றாலும் சரியல்ல. என்னுடைய முதன்மை சாட்சியத்தில் சர்வே எண் 50 ல் வடக்கு பக்கம் இருக்கும் 25 செண்டை ஆவல முனியப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.38 புல வரைப்படத்தின் படி சர்வே எண் 50/1B1B என்பது சர்வே எண் 50/1B1A விற்கு தெற்கு பக்கத்தில் உள்ளது என்றால்

சரிதான். சர்வே எண் 50ல் வடக்கு பக்கம் 25 சென்ட் ஆவலமுனியப்பாவிற்கு பாகம் ஒதுக்கப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சர்வே எண் 50ல் ஒணி(கால் நடைப்பாதை) இருப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு ஒணி செல்லும் பகுதி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. ஒணி இருந்ததாக சொல்லும் பகுதியைதான் நான் பஞ்சாயத்திற்கு பி.வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பஞ்சாயத்து தலைவர் பெயரில் உள்ள பட்டாவை பி.வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 50/1B ல் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாமல் அந்த சொத்தை பொறுத்து பஞ்சாயத்து தலைவர் பெயருக்கு பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதி வருவாய் ஆவணங்களை மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.27 முதல் பி.வா.சா.ஆ.29 மற்றும் 37 வரையிலான வரி ரசீதுகள் வழக்கு சொத்திற்கான ரசீதுகள் என்றால் சரியல்ல. அதேபோல் பி.வா.சா.ஆ.30 முதல் 36 வரையிலான வரி ரசீதுகள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு எங்களால் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.40 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வங்கியால் வழங்கப்பட்ட ரசீதுக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 50/1B ல் உள்ள 0.62.5 ஹெக்டர்ஸ் இடம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியம் இல்லாத சொத்தை பொறுத்து நாங்கள் பஞ்சாயத்து தலைவர் பெயருக்கு மோசடியான பத்திரத்தை தயார்

செய்து வருவாய் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

எங்களுக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லும் 25 செண்டில் புளிய மரம் இருப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த புளிய மரம் தற்போதும் உள்ளதா என்றால் உள்ளது. சுமார் 2 ஆண்டுக்களுக்கு முன்பு நான் அந்த புளிய மரத்தை நான் வெட்ட முயற்சி செய்த போது வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. புளிய மரத்தின் ஒரு கிளை மட்டும் உடைந்த நிலையில் இருந்ததால் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் பஞ்சாயத்தால் அந்த கிளையை அகற்றப்பட்டது. உரிமை இல்லாமல் நான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை பஞ்சாயத்து தலைவர் பெயரில் எழுதி வைத்துள்ளாதால் வழக்கு சொத்தில் பஞ்சாயத்து தலைவருக்கோ வருவாய் அதிகாரிக்கோ எந்த உரிமையையும் ஏற்படாது என்றால் சரியல்ல. நான் சொல்வதை போல் வழக்கு சொத்தில் ரோடு ஏதுவும் இல்லை என்றாலும் வருவாய் ஆவணங்களில் பொய்யாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. என் பெயரில் தவறாக வழங்கப்பட்ட பட்டா மற்றும் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் நான் வழக்கு சொத்தில் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. வாதி கோரியப்படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /−ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**